தமிழகச் சட்டப் பேரவை.

சனிக்கிழமை, மார்ச் 18, 1967.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 8-30 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர், **திரு. சி. ப. ஆதித்தனர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) யிடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்: இன்று கேள்விகள் இல்லை. அடுத்தாற்போல் நான் இந்தச் சட்டப்பேரவைக்குத் தெரிவிக்க வேண்டிய அறிவிப்பு ஒன்றுள்ளது. தமிழக சட்டப்பேரவை விதிகளின் 193-வது விதியின் 1-வது உட்பிரிவின்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை, அலுவல் ஆய்வுக் குழு (பிசினஸ் அட்வைசரி கமிட்டி) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்
2. மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்—அவை முதல்வர்
3. மதிப்பிற்குரிய திரு. மு. கருணாநிதி
4. மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்
5. திரு. அ. ப. அழகமுத்து
6. திரு. பி. ஜி. கருத்திருமன்
7. திரு. கே. விநயகம்
8. திரு. பி. கே. மூக்கையா தேவர்
9. திரு. அ. பாலசுப்பிரமணியன்
10. திரு. ஆ. கு. சுப்பையா
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
12. திரு. க. ர. நல்லசிவம்
13. டாக்டர் ஹபிபுல்லா பேக்
14. திரு. ம. பொ. சிவஞானம்

இந்தக் குழுவின் எல்லாக் கூட்டங்களிலும் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள அனுமதி உண்டு. இந்தக் குழுவின் முதற் கூட்டம் இன்று காலை 10 மணியளவில் பேரவைத் தலைவர் அறையில் நடைபெறும் என்று அறிவிக்கிறேன்.